முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான ஆட்சி - சட்டத்தின்படி நடக்கும் ஆட்சி!

# சட்ட மீறல்கள் எங்கு நடந்தாலும் நிச்சயம் நடவடிக்கை!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு திட்டவட்டம்!

சென்னை, ஜூன் 29 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நேற்று முன்தினம் (27.06.2023) ஆணையர் அலுவலகத்தில் 2022-2023 மற்றும் 2023-2024 ஆகிய நிதியாண்டு களின் சட்டமன்ற அறிவிப்புகளின்படி, இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களின் ஒருங்கிணைந்த பெருந்திட்ட பணிகள் (Master Plan) மற்றும் சிறப்பு திட்டப் பணிகளின் பணி முன்னேற்றம் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

பின்னர், அமைச்சர் பி.கே. சேர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி, திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்ற பிறகு திராவிட மாடல் ஆட்சி என்பதற்கு சான்றாக 10 திருக்கோயில்களில் முதற்கட்டமாக பெருந்திட்ட பணிகள் (Master Plan) தொடங்கப்பட்டன. பெரியபாளையம், பவானி அம்மன் திருக்கோயில், திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், இராமேஸ்வரம் இராமநாதசுவாமி திருக்கோயில், திருவண்ணா மலை அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், திருத்தணி சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், சமயபுரம் மாரியம்மன் திருக்கோயில், வடலூர் அருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையம், பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், திருவேற்காடு, தேவி கருமாரியம்மன் திருக்கோயில், இருக்கன்குடி மாரியம்மன் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் ரூ.1,360 கோடி மதிப்பீட்டில் பெருந்திட்ட வரைவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதில் திருச்செந்தூர் திருக்கோயில் பணி துவங்கப்பட்டுள்ளது. பழனி திருக்கோயில் பெருந்திட்ட வரைவுக்காக சுமார் ரூ.58 கோடி மதிப்பீட்டிலான 50 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. அதேபோல் இடும்பன் மலைக்கும் பழனிக்கும் ரோப்கார் அமைத்தல், திருக்கழுக்குன்றம், திருநீர்மலை, அனுவாவி ஆகிய இடங்களிலுள்ள திருக்கோயில்களுக்கு ரோப் கார் அமைக்கும் பணிகள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

### ஒருங்கிணைந்த பெருந்திட்டப் பணிகள்

2023 - 2024 ஆம் ஆண்டு அறிவிப்புகளின்படி, அழகர் கோயில், கள்ளழகர் திருக்கோயில், மருதமலை, சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், சிறுவாபுரி, பால சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், மேல்மலையனூர், அங்காளபரமேஸ்வரி திருக்கோயில், திருச்சி மாவட்டம், குமாரவயலூர், சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் ரூ. 200 கோடி மதிப்பீட்டிலும் ஒருங்கிணைந்த பெருந்திட்டப் (Master Plan) பணிகள் கீழ் மேற்கொள்ளப்படவுள்ளன.

சிறப்பு திட்டங்களாக நாகப்பட்டினம் மாவட்டம், துளசியாப்பட்டினத்தில் தமிழ் மூதாட்டி ஔவையாருக்கு ரூ.18 கோடி மதிப்பீட்டில் மணி மண்டபம், மயிலாப்பூரில் ரூ.25 கோடி மதிப்பீட்டில் கலாச்சாரம் மையம், சோளிங்கரில் ரூ. 7 கோடி மதிப்பீட்டில் மனநல காப்பகம், மயிலாப்பூர் திருவள்ளுவர் திருக்கோயிலை ரூ.15 கோடி மதிப்பீட்டில் மேம்பாடு செய்யும் பணிகள் குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது. இந்த பணிகள் முழுமை அடைந்ததோடு விட்டுவிடாமல் தொடர்ச்சியாக ஆண்டுதோறும் 5 திருக்கோயில்களை பெருந்திட்ட வரைவில் சேர்ப்பதற்கு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்.

கோயில் திருவிழாக்களில் யாருக்கும் முதல் மரியாதை அளிக்கக் கூடாது என சென்னை உயர்நீதிமன்றம் அளித்த நல்ல தீர்ப்பினை வரவேற்கிறோம். அதனை நடைமுறைப்படுத்துவதற்கும் துறை தயாராக இருக்கின்றது. சிதம்பரம் திருக்கோயிலை பொருத்தளவில் தீட்சிதர்கள் அக்கோயிலில் ஒரு அதிகாரம் மையத்தை ஏற்படுத்திக் கொண்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். வழிபாட்டு முறைகளில் ஆதிகாலம் தொட்டு என்ன முறைகள் பின்பற்றப்படுகின்றதோ அதில் துளி அளவுகூட தலையிட்டு, வழிபாட்டு முறைகளை மாற்றுகின்ற எண்ணம் இந்து சமய அறநிலைத்துறைக்கு இல்லை. அந்த கோயிலானது மன்னர்கள் காலத்தில் கட்டப்பட்டது. அதை டெனாமினேஷன் கோயிலாக அறிவிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு தொடர்ந்து இது போன்ற சர்ச்சைகளில் தீட்சிதர்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

### அரசாணை!

நம்மை பொறுத்தளவில் மக்களுடைய நன்கொடைகளால் இந்த திருக்கோயில் நடந்து கொண்டிருக்கின்றது. இந்த திருக்கோயிலில் ஒரு உண்டியல் கூட இருக்காது. மற்ற திருக்கோயில்களை பார்த்தோமானால் உண்டியல்களும் இருக்கும், வரவு செலவு கணக்கும் இருக்கும். இந்த திருக்கோயிலை இந்து சமய அறநிலையத்துறை எடுக்கின்ற பொழுது அன்றைக்கு திருக்கோயிலிலிருந்த ரொக்க பணம் எவ்வளவு என்பதை தணிக்கை செய்வதற்கும், விலைமதிப்பற்ற தங்க நகைகள் மற்றும் ஆபரணங்களை கணக்கீடு செய்வதற்கும் இதுவரையில் அனுமதிக்க மறுக்கின்றார்கள். அதேபோல் இந்த காலகட்டத்தில் திருக்கோயிலுக்கு வரப்பெற்ற வரவுகள் குறித்து தகவல் தெரிவிக்க மறுப்பதோடு தங்களது சொந்த நிறுவனம் போல் கோயிலை பாவித்து கொண்டிருக்கின்றார்கள். இதைத்தான் அரசு தட்டி கேட்கின்றது. மக்கள் பணத்தால், மக்களின் முழு அர்ப்பணிப்பால் நடக்கின்ற இந்த திருக்கோயிலைப் பற்றி மக்களுக்கும், அரசுக்கும் வெளிப்படையாக சேர்க்க வேண்டிய தகவல்களை கூட தர மறுக்கின்றார்கள்.

உயர்நீதிமன்றத்தில் தனி ஒருவர் தொடர்ந்த வழக்கின் அடிப்படையில், கனக சபையின் மீது பக்தர்கள் தரிசனம் செய்வதற்கு இந்து சமய அறநிலையத்துறை முடிவு எடுக்கலாம் என உயர் நீதிமன்றம் தீர்ப்பு அளித்தது. அத்தீர்ப்பின் அடிப்படையில் இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் அரசாணை பிறப்பித்திருக்கின்றது. ஆனி திருமஞ்சனம் என்ற காரணத்தைக் காட்டி கனக சபையின் மீது பக்தர்கள் ஏறி தரிசனம் செய்ய நான்கு நாட்களுக்கு அனுமதி இல்லை என தீட்சிதர்கள் மறுக்கின்றார்கள். இதற்கு எந்த நடைமுறையும் இல்லை. ஆகவே இந்த நான்கு நாட்களும் பக்தர்களை நீதிமன்ற தீர்ப்பு மற்றும் அரசாணையின்படி கனக சபையின் மீது ஏறி தரிசனம் செய்ய அனுமதிக்க வேண்டும் என்று நியாயத்தின் பக்கம் நாங்கள் நின்று கொண்டிருக்கின்றோம். அவர்கள் வைத்தது தான் சட்டம் என்பது போல் தீட்சிதர்கள் அந்த திருக்கோயிலை முழுவதுமாக ஆட்டுவித்துக் கொண்டிருக்கிறார்கள். இதைத்தான் நாங்கள் எதிர்க்கிறோம். படிப்படியாக சட்ட மீறல்கள் எது இருந்தாலும் அவை அனைத்தையும் உடைத்தெறிந்து சட்டத்தின் ஆட்சி இங்கு நடைபெறுகிறது என்பதை நடராஜர் கோயிலிலும், தீட்சிதர்களிடமும் இந்த துறை நிரூபிக்கும். அதற்குண்டான அனைத்து தகவல்களையும், ஆதாரங்களையும் திரட்டிக் கொண்டிருக்கின்றோம்.

பக்தர்கள் திருக்கோயிலுக்கு வருவது தங்களின் வாழ்வு நன்றாக இருக்க வேண்டும், அனைவரும் நன்றாக இருக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்வதற்கு தான். பக்தர்கள் தெய்வத்திற்கு அடுத்ததாக அர்ச்சகர்களைத்தான் நம்புவார்கள், போற்றுவார்கள். ஆனால் அந்த அர்ச்சகர்களே பக்தர்களை அடிப்பதை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும். காய்ந்து போகின்ற பூமி எல்லாம் வற்றாத நதியை பார்த்து ஆறுதல் கொள்ளும் என்பார்கள். அந்த நதியே காய்ந்து போயிட்டால்..? துன்பப்படுபவர்கள் தெய்வத்திடம் முறையிடுவார்கள். தெய்வத்தின் சன்னிதானத்தில் இருப்பவர்கள் சட்டத்தை கையில் எடுத்துக் கொண்டு வன்முறையில் ஈடுபட்டால் எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்? இந்த ஆட்சி சட்டத்தின்படி நடக்கும் ஆட்சி. சட்ட மீறல்கள் இருந்தால் அதன் மீது நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு கடத்தப்பட்ட 286 சிலைகள் மீட்கப்பட்டிருக்கின்றன. எந்த காலத்திலும் இல்லாத அளவிற்கு அதிகமான எண்ணிக்கையில் சிலைகள் மீட்கப்பட்டதோடு, களவு போன 28 சிலைகள் மேலை நாடுகளில் இருப்பதாக கண்டறியப்பட்டு அவற்றையும் ஒன்றிய அரசின் துணையோடு மீட்டு தமிழகத்திற்கு கொண்டு வருவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. அது மட்டுமின்றி இங்கு இருக்கின்ற உலோகத் திருமேனிகளுக்கு (சிலைகளுக்கு) QR Code கொடுத்திருக்கின்றோம். களவு போன சிலைகளை மீட்பது ஒரு புறம், இருக்கின்ற சிலைகள் களவு போகாமல் பாதுகாப்பது ஒருபுறம் என்று இரண்டு கூறுகளையும் இந்து சமய அறநிலைத் துறை அலுவலர்களின் உதவியோடு திறமையாக கையாண்டு வருகிறோம். களவுபோய் மீட்கப்பட்ட சிலைகள் அடையாளம் காணப்பட்டு, அவை அந்தந்த திருக்கோயில்களில் ஒப்படைக்கப்படும். அந்த சிலைகளை பாதுகாக்க வேண்டுமென்பதற்காகதான் திருக்கோயில்களில் பாதுகாப்பறைகள் (Strong Rooms) ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இதுவரை 1,100க்கும் மேற்பட்ட பாதுகாப்பறைகள் அமைக்கின்ற பணிக்கு டெண்டர் கோரப்பட்டிருக்கின்றன. 500க்கும் மேற்பட்ட திருக்கோயில்களில் பாதுகாப்பறை கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தாண்டு இறுதிக்குள் குறைந்தபட்சம் 500க்கும் மேற்பட்ட திருக்கோயில்களில் இந்த பாதுகாப்பறைகள் அமைக்கின்ற பணி நீதிமன்ற உத்தரவின் படி செயல்பாட்டிற்கு வரும்.

நன்றாக காய்த்திருக்கின்ற மரம்தான் கல்லடிபடும் என்பார்கள். இந்து சமய அறநிலையத்துறையின் சிறப்பான நிர்வாகத்தால் குற்றம் கண்டுபிடிக்க முடியாதவர்கள் பூதக்கண்ணாடியை வைத்து குறைகளை தேடி கொண்டிருக்கிறார்கள். இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு தான் ரூ.4,740 கோடி மதிப்பீட்டிலான திருக்கோயிலுக்கு சொந்தமான 5,001 ஏக்கர் நிலங்கள், 1,266 கிரவுண்ட் கட்டடம் மற்றும் மனைகள் மீட்கப்பட்டுள்ளன. 2 ஆண்டுகளில் 788 திருக்கோயில்களுக்கு குடமுழுக்குகள் நடந்திருக்கின்றன.

இந்து சமய அறநிலைத் துறை வரலாற்றில் குறுகிய காலத்தில் அதிக எண்ணிக்கையிலான திருக்கோயில்களில் குடமுழுக்கு நடைபெற்றுள்ளது இதுவே முதல் தடவையாகும். அதேபோல ஒரே தவணையில் 2,500 கிராமப்புற கோயில்களுக்கும் 2,500 ஆதிதிராவிடர்கள் பழங்குடியினர் வசிக்கின்ற பகுதியிலே இருக்கின்ற திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் மேற்கொள்ள தலா ரூ.2 லட்சம் நிதியுதவி வழங்கப்பட்டிருக்கிறது. 1,000 ஆண்டுகளுக்கு மேல் தொன்மையான திருக்கோயில்களின் திருப்பணிக்கு 2022 - 2023 ஆம் ஆண்டில் ரூ.100 கோடியும், 2023 24 ஆம் ஆண்டிற்கு ரூ.100 கோடியும் அரசு மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆட்சி காலம் இந்து சமய அறநிலையத்துறையின் பொற்காலமாக திகழ்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் குற்றம் கண்டுபிடிப்பதற்கு என்று ஒரு கூட்டம் அலைந்து கொண்டிருக்கின்றது. அவர்களுடைய கனவு ஆன்மிகத்தை வைத்து அரசியல் நடத்தலாம் என்பதாகும். ஆன்மிகத்தை அறமாக நினைத்து, அந்தப் பணியை திறம்பட செய்து வருகின்ற முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசில் அவர்களின் எண்ணம் ஒருபோதும் நிறைவேறாது. எங்கள் பணிகளில் குறைகள் இருப்பின் அவற்றை எடுத்து கூறினால், தவறு இருந்தால் நிச்சயமாக அதனை நிவர்த்தி செய்வதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். வேண்டுமென்றே குற்றம், குறை கூறுபவர்களுக்கு பதில் சொல்லி, அவர்களுக்காக எங்களது காலத்தை வீணடிக்கத் தயாராக இல்லை.

எங்களைப் பொறுத்தளவில் திராவிட மாடல் ஆட்சியில் அனைவரும் சமம். சகோதர பாசத்துடன் அண்ணன் தம்பியாக ஒன்றுபட்டு வாழ்ந்து கொண்டிருக்கின்ற இந்த பூமியில் பிளவு ஏற்பட வழி வகுப்பதற்கு எள்ளளவும் இடம் தர மாட்டோம். அந்த வகையில் இந்து சமய அறநிலையத்துறையின் திருக்கோயில்களுக்கு வருபவர்கள் அந்த வழிபாட்டு முறையை ஏற்றுக் கொண்டு வருபவர்கள் யாராக இருந்தாலும் மத அடையாளம் இல்லாமல் வருபவர்களை ஏற்றுக் கொள்வதற்கு தயார்.

இவ்வாறு அமைச்சர் பி.கே. சேகர்பாபு தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை சிறப்புப் பணி அலுவலர் ஜெ. குமரகுருபரன், ஆணையர் க. வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர்கள் அ.சங்கர், திருமதி ந.திருமகள், திருமதி சி.ஹரிப்ரியா, இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி பொறுப்பாளர் பட்டியல்!

9 ஆம் பக்கத் தொடர்ச்சி

சமூகவலைதளம் - எஸ். சிவப்பிரகாஷ்
மகளிர் - செல்வி. தி. அனுஷா

**பூவிருந்தவல்லி நகர ஒருங்கிணைப்பாளர்கள்:**
களப்பணி - த. பாலாஜி
சமூகவலைதளம் - எஸ். லோகேஷ் பாலாஜி
மகளிர் - திருமதி. ஆர். ஜெயப்பிரதா

**திருமழிசை பேரூர் ஒருங்கிணைப்பாளர்கள்:**
களப்பணி - இ. தரணி பிரசாத்
சமூகவலைதளம் - ஜெ. ஆனந்தராஜ்
மகளிர் - திருமதி. டி. திவ்யா

**பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:**
களப்பணி - எஸ். சுதாகரன்
சமூகவலைதளம் - ரா. அருண் பிரசாத்
மகளிர் - - திருமதி. ந. அம்சவல்லி

**பூவிருந்தவல்லி மேற்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:**
களப்பணி - இ. பிரதீப்
சமூகவலைதளம் - ஏ. சந்தோஷ் குமார்
மகளிர் - திருமதி. சா. அனிதா

**திருவள்ளூர் கிழக்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:**
களப்பணி - கி. மணிகண்டன்
சமூகவலைதளம் - பா. ஆதவன்
மகளிர் - - திருமதி. ஜெ. செல்வி

**திருவள்ளூர் மேற்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:**
களப்பணி - கே.சி. சூரியபிரபு
சமூகவலைதளம் - கே.எம்.கார்த்திக்
மகளிர் - திருமதி. ஆ. நதியா

**திருவள்ளூர் வடக்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:**
களப்பணி - அ. அஜித் குமார்
சமூகவலைதளம் - கே. லோகேஷ்
மகளிர் - திருமதி. டி. துர்கா தேவி

**எல்லாபுரம் மத்திய ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:**
களப்பணி - என்.எம். விஜயகுமார்
சமூகவலைதளம் - வி. செல்வம்
மகளிர் - திருமதி. எஸ். ரேகா

### காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம்

**உத்திரமேரூர் தொகுதி ஒருங்கிணைப்பாளர்**
களப்பணி - என்.டி.சரவணன்
சமூகவலைதளம் - அண்ணாதுரை சுகுமார்
மகளிர் - செல்வி. பி.செல்வி

**உத்திரமேரூர் பேரூர் ஒருங்கிணைப்பாளர் :**
களப்பணி - வசந்தகுமார்
சமூகவலைதளம் - எம். சக்திவேல்
மகளிர் - செல்வி. அகல்யா

**வாலாஜாபாத் பேரூர் ஒருங்கிணைப்பாளர் :**
களப்பணி - ஜெ.பார்த்தசாரதி
சமூகவலைதளம் - எஸ். பிரிதிவிராஜ்
மகளிர் - செல்வி சதாயி

**உத்திரமேரூர் ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்:**
களப்பணி - ஏ.சண்முகம்
சமூகவலைதளம் - கா. விஜயராஜ்
மகளிர் - திருமதி வளர்மதி சுதாகர்

**சாலவாக்கம் ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் :**
களப்பணி - சி.ரா.ராஜேஷ்
சமூகவலைதளம் - வி.ஜெயபுரி
மகளிர் - செல்வி நந்தினி

**வாலாஜாபாத் தெற்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் :**
களப்பணி - ஆர்.சிலம்பரசன்
சமூகவலைதளம் - அஜித் குமார்
மகளிர் - செல்வி கமலா

**காஞ்சிபுரம் தெற்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் :**
களப்பணி - த. நவீன் குமார்
சமூகவலைதளம் - ஆ.சதீஷ்
மகளிர் - செல்வி சத்தியா. சி

**காஞ்சிபுரம் தொகுதி ஒருங்கிணைப்பாளர்**
களப்பணி - மா.மகேந்திரன்
சமூகவலைதளம் - கே.பி.கிருஷ்ணகுமார்
மகளிர் - திருமதி. கோமதி நீலகண்டன்

**காஞ்சிபுரம் பகுதி 1 ஒருங்கிணைப்பாளர் :**
களப்பணி - ஏ.பழனிராஜ்
சமூகவலைதளம் - செல்வமணி
மகளிர் - திருமதி. நந்தினி

**காஞ்சிபுரம் பகுதி 2 ஒருங்கிணைப்பாளர்**
களப்பணி - பி.ஹரிஹரன்
சமூகவலைதளம் - எம்.புருஷோத்தமன்
மகளிர் - திருமதி. பி.அம்சா

**காஞ்சிபுரம் பகுதி 3 ஒருங்கிணைப்பாளர்**
களப்பணி - மகேஷ்
சமூகவலைதளம் - தாமோதரன்
மகளிர் - திருமதி. சாரா விஜய்

**காஞ்சிபுரம் பகுதி 4 ஒருங்கிணைப்பாளர்**
களப்பணி - கே.பாண்டியன்
சமூகவலைதளம் - கே.ராம்குமார்
மகளிர் - செல்வி ச.ஷர்மிலி

**காஞ்சிபுரம் வடக்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்**
களப்பணி - எஸ். ஸ்ரீ சபரிவாசன்
சமூகவலைதளம் - முஹம்மது யாகூப்
மகளிர் - திருமதி மாலினி சங்கர்

**வாலாஜாபாத் வடக்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்**
களப்பணி - என்.ஜெயபால்
சமூகவலைதளம் - ஆர்.கார்த்திக்
மகளிர் - செல்வி. பி.டில்லிராணி

**செய்யூர் தொகுதி ஒருங்கிணைப்பாளர்**
களப்பணி - செ. தென்னகச்செல்வன்
சமூகவலைதளம் - எஸ். பிரகாஷ்
மகளிர் - திருமதி. ஆர். வினோதினி

**சித்தாமூர் மேற்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்**
களப்பணி - இ. சீமாத்தான்
சமூகவலைதளம் - நா தினேஷ்
மகளிர் - செல்வி.ருக்மணி

**சித்தாமூர் கிழக்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்**
களப்பணி - உதயசங்கர்
சமூகவலைதளம் - பி. சந்தோஷ்
மகளிர் - செல்வி பி. உஷா

**இலத்தூர் வடக்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்**
களப்பணி - ஜி.பிரகாஷ்
சமூகவலைதளம் - ஜெ சந்திரசேகர்
மகளிர் - செல்வி வி. ஹேமபிரியா

**இலத்தூர் தெற்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்**
களப்பணி - எம்.செந்தில்
சமூகவலைதளம் - விசால்
மகளிர் - திருமதி எஸ்.வி. தீபா

**திருக்கழுக்குன்றம் தெற்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்**
களப்பணி - பிரபாகரன் மா
சமூகவலைதளம் - எஸ். முகமது தன்வீர்
மகளிர் - திருமதி அருள்மொழி

**இடைக்கழிநாடு பேரூர் ஒருங்கிணைப்பாளர்**
களப்பணி - டி.அருள்
சமூகவலைதளம் - உதய குமார் .ம
மகளிர் - திருமதி ரம்யா .ம

**மதுராந்தகம் தொகுதி ஒருங்கிணைப்பாளர்**
களப்பணி - மு.ச.டில்லி பாபு
சமூகவலைதளம் - மனோகர். க
மகளிர் - திருமதி ஏஞ்சல் ராஜகுமாரி.ஹெச்

**கருங்குழி பேரூர் ஒருங்கிணைப்பாளர்**
களப்பணி - பிரசாந்த் ந
சமூகவலைதளம் - உ.கார்தீஸ்வரன்
மகளிர் - செல்வி எம்.பிரியங்கா

**அச்சிறுப்பாக்கம் பேரூர் ஒருங்கிணைப்பாளர்**
களப்பணி - முகமது முபாரக்
சமூகவலைதளம் - ஆர். கோகுல் குமார்
மகளிர் - திருமதி காயத்ரி

**மதுராந்தகம் நகர ஒருங்கிணைப்பாளர்**
களப்பணி - சுரேஷ்குமார் முருகேசன்
சமூகவலைதளம் - டி. சிலம்பரசன்
மகளிர் - செல்வி சித்ரா .ப

**அச்சிறுப்பாக்கம் தெற்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்**
களப்பணி - ரா.ராஜசேகர்
சமூகவலைதளம் - செந்தில்குமார் வீ
மகளிர் - செல்வி கவிபிரியா

**அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்**
களப்பணி - நாராயண மூர்த்தி
சமூகவலைதளம் - மு.க.கோகுல்
மகளிர் - செல்வி இந்துமதி.பா

**மதுராந்தகம் தெற்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்**
களப்பணி - கௌதம் ரவி
சமூகவலைதளம் - எஸ். ஜெகதீசன்
மகளிர் - செல்வி ச.தைரியலட்சுமி

**மதுராந்தகம் வடக்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்**
களப்பணி - டி.அருண்குமார்
சமூகவலைதளம் - மு கணேஷ்குமார்
மகளிர் - செல்வி வ.ீரீ வேத்தாஷாலினி

"அண்ணா அறிவாலயம்"
சென்னை -18.
நாள்- 27.06.2023

**டி.ஆர்.பி.ராஜா**
செயலாளர்
தி.மு.க. தகவல் தொழில் நுட்ப அணி


## ஒழுங்கு நடவடிக்கை

### தலைமைக் கழக அறிவிப்பு

திண்டுக்கல் மேற்கு மாவட்டம், நத்தம், சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த வேலம்பட்டி அ.கந்தசாமி, கொசவபட்டி சூ.மரிய ஆரோக்கியம், பூசாரிபட்டி இரா. உத்தமன், கண்ணமனூர் கு.கனகராஜ், இராகலாபுரம் இரா. சரவணன் ஆகியோர் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டதால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்கள்.

'அண்ணா அறிவாலயம்'
சென்னை -600 018.
நாள் 27-06-2023

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்
தி.மு.க.



" ஒரு பார்ப்பனர்
தனது சாதியின் பெயரால்
ஒரு செல்வந்தரை அவமானப்படுத்தினால்,
நான் செல்வந்தர் பக்கம் இருப்பேன்.

அதே செல்வந்தர்
தன்னிடம் வேலை பார்க்கும் தொழிலாளியை துன்பப்படுத்தினால்,
நான் தொழிலாளி பக்கம் இருப்பேன்.

அதே தொழிலாளி
தனது மனைவியைக் கொடுமைப்படுத்தினால்,
நான் அந்த பெண்ணின் பக்கம் இருப்பேன்.

அடிமைத்தனம் ஒழிய வேண்டுமென்பதே
என் குறிக்கோளே தவிர
யார் பக்கம் இருப்பது என்பது அல்ல ! "

**தந்தை பெரியார்**

அமைச்சர் எஸ்.ரகுபதி சிறப்புரை!

# "சிறைகளில் கலை" எனும் திட்டம் புழல் மத்திய சிறையில் துவக்கம்!

## மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. - டி.ஜி.பி. அமரேஷ் புஜாரி பங்கேற்பு!

சென்னை, ஜூன் 29 -

சிறைகள் மற்றும் சீர்திருத்தப்பணிகள் துறையின் நோக்கம், சிறைவாசிகளை பாதுகாப்பது மட்டுமின்றி அவர்களை சீர்திருத்தி மறுவாழ்வளித்து விடுதலைக்கு பின் சமூகத்தில் பயனுள்ள குடிமக்களாக இணைப்பதன் மூலம் அவர்கள் மீண்டும் குற்றம் இழைத்து சிறைப்படுதலை தடுப்பது ஆகும். இந்த நோக்கத்தை செயல்படுத்தும் வகையில், தமிழ்நாடு சிறைகள் மற்றும் சீர்திருத்தப்பணிகள் துறை பல்வேறு புதிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

சிறைத்துறையால் எடுக்கப்பட்ட இதுபோன்ற மற்றொரு முயற்சியில், "சிறைகளில் கலை" என்ற புதிய திட்டத்தின் மூலம் சிறைவாசிகளின் மன அழுத்தத்தைக் குறைக்கவும், அவர்களை சீர்திருத்தம் செய்யும் ஒரு புதிய திட்டம் ஆகும்.

"சிறைகளில் கலை" என்ற திட்டத்தின் துவக்க விழா புழல், மத்திய சிறை -1ல் சட்டம், நீதி, சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமையில் நடைபெற்றது. இத்திட்டம் மற்ற மத்திய சிறைகளில் விரைவில் செயல்படுத்தப்படும்.

சிறைகளில் கலை என்ற திட்டத்தில் டெல்லி தேசிய சட்டப்பல்கலைக் கழகம் மற்றும் சுமனசா அறக்கட்டளையும் இணைந்து சிறைவாசிகளுக்கு ஆழ்நிலை தியானம், யோகா, இசை, நாடகம், இலக்கியம் மற்றும் விளையாட்டு போன்ற பயிற்சிகளை வழங்குகிறது. இந்த திட்டத்தின் கீழ் பயிற்சி பெற விரும்பும் சிறைவாசிகளுக்கு மேற்படி பயிற்சியுடன் 6 மாத கால பட்டய படிப்பும் சான்றிதழும் வழங்கப்படும்.

இத்திட்டத்தின் துவக்க விழா சுமனசா அறக்கட்டளை நிறுவனத்தின் நடனக்கலை கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகளுடன் புழல், மத்திய சிறை-1ன் 700 சிறைவாசிகளின் மத்தியில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சுதர்சனம் அவர்கள், தமிழ்நாடு சிறைகள் மற்றும் சீர்திருத்தப்பணிகள் துறை தலைமை இயக்குநர் அமரேஷ் புஜாரி, சென்னை சுமனசா அறக்கட்டளை நிறுவனர் டி.எம். கிருஷ்ணா, சிறைத்துறைத் துணைத்தலைவர் (தலைமையிடம்) இரா.கனகராஜ், சென்னை சரக சிறைத்துறைத் துணைத் தலைவர் ஆ.முருகேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விழா ஏற்பாடுகளை புழல், மத்திய சிறை - 2 கண்காணிப்பாளர் இரா. கிருஷ்ணராஜ் மற்றும் அலுவலர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.



நாகை மாவட்டம் கீழ்வேளூர் ஒன்றியம் வெங்கிடங்கால் ஊராட்சியில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாமை நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன் தொடங்கி வைத்தார். உடன் நாகை மாவட்ட ஆட்சித்தலைவர் ஜானிடாம்வர்கீஸ், கீழ்வேளூர் வடக்கு ஒன்றியச் செயலாளரும், தலைமைச் செயற்குழு உறுப்பினருமான ப.கோவிந்தராசன், கீழ்வேளூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் கே.பழனியப்பன், மாவட்ட ஊராட்சி தலைவர் உமாமகேஸ்வரிசங்கர், ஊராட்சி மன்ற தலைவர் பசுமதிரமேஷ்குமார் மற்றும் பலர் உள்ளனர்.